<u>2026 ஆகஸ்ட் மாதம் 06– ஆம் தேதி வியாழக்கிழமை</u>

<u>கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி</u>

<u>S.C. நெம்பர் : 4/2025</u>

2026–ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 06– ஆம் தேதி வியாழக்கிழமை திருமதி.ட.சுபத்ரா, கிரேடு I பெஞ்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | PW2 (LW2) – மொக்கைப்பாண்டி |
| தகப்பனார் பெயர்: | மாயாண்டி |
| ஊர்: | சின்ன ஓவுலாபுரம் |
| வட்டம்: | உத்தமபாளையம் |
| மாவட்டம்: | தேனி |
| தொழில்: | கூலிவேலை |
| வயது : | 67 |

06.08.2026

(எதிரி நீதிமன்ற காவல் மூலம் ஆஜர்படுத்தப்பட்டார். எதிரியின் வழக்கறிஞரும் ஆஜர்).

(சாட்சி அழைக்கப்பட்டு சம்பந்தப்பட்ட போலீசாரால் அவரது ஆதார் அடையாள அட்டை மூலம் அடையாளம் காணப்பட்டு ஒப்பீடு செய்யப்பட்டு பின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் அளிக்கிறார்)

**முதல் விசாரணை**:–

1. நான் தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், சின்ன ஓவுலாபுரம் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் விவசாய கூலிவேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரி எனது மகன் ஆவார். அ.சா.1 எனது மனைவி ஆவார். எதிரிக்கு திருமணம் ஆகி, இரண்டு பிள்ளைகள் உள்ளனர். சுமார் 2 வருடங்களுக்கு முன்னர் 2வது மாதம் தேதி ஞாபகமில்லை, நான் படிக்காதவன் என்பதால் தேதி ஞாபகமில்லை, கடந்த 2024ம் வருடம் 2வது மாதம் நான் எனது வீட்டில் இருந்தபோது, எதிரியான எனது மகன்

ரூ.50,000/- செய்முறை செய்ய சொல்லி கேட்டார். நாங்கள் ரூ.50,000/- பணம் செய்முறை செய்தோம். மீண்டும் அதே மாதம் நான் வீட்டிலிருந்தபோது, ரூ.10,000/- எதிரி கேட்டார்.

2. நான் ஓரிரு நாட்களில் தருவதாக சொன்னேன். நான் வீட்டிற்குள் படுத்து இருந்தேன். ஆஜர் எதிரியான எனது மகன் அசிங்கமாக திட்டி, வெளியே வாடா என்று கத்தினார். நான் வெளியில் வரும்போது, பிடி வைத்த கத்தியால் என்னை இடது தோள்பட்டை பின்புறம், இடது விலாபகுதி குத்தினார், நான் தடுக்க முயன்ற போது, கத்தியால் இடது வயிறு மற்றும் வலது வயிறு பகுதியில் குத்தி கிழித்துவிட்டார். குடல் அறுந்து நான் உண்ட உணவு வெளியில் வந்துவிட்டது. எனது மனைவி, முத்துப்பாண்டி, மாவீரன் ஆகியோர் ஓடிவந்தவுடன் எதிரி ஓடிவிட்டார். என்னை மருத்துவமனைக்கு அழைத்து செல்ல தூக்கும்போது நான் மயங்கிவிட்டேன். மயக்கம் தெளிந்து பார்க்கும்போது, சின்னமனூர் அரசு மருத்துவமனையில் இருந்தேன்.

3. அதன் பின்னர் தேனி, க.விலக்கு அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் மேல்சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டு, எனக்கு குடல் அறுவை சிகிச்சை மேற்கொண்டனர். சுமார் 1 அடி நீளம் அளவிற்கு தையல் போடப்பட்டுள்ளது. நான் தேனி, க.விலக்கு அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சுமார் 13 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை எடுத்துக்கொண்டேன். அ.சா.ஆ.1 புகாரை எனது மனைவி கொடுத்தார். போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள். என்னிடம் காட்டப்படும் அ.சா.பொ.1 கத்தியால் தான் எதிரி என்னை குத்தினார். அ.சா.பொ.2 சட்டை சம்பவத்தின்போது எதிரி அணிந்திருந்த சட்டையாகும். அறுவை சிகிச்சைக்கு பிறகு அளவிற்கு அதிகமாக உணவு எடுத்துக்கொண்டால் ஒருபக்கமாக வீக்கம் ஏற்பட்டு, அதிக சிரமப்படுகிறேன்.

என்னால் கூலிவேலைக்கு செல்ல இயலவில்லை. அதிக சிரமத்துடன் இருக்கிறேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை –</u>

4. புகார் வாக்குமூலம் கொடுத்த விபரம் யார் சொல்லி எனக்கு தெரியும் என்றால் அப்போது எனக்கு நினைவு இருந்தது. தற்போது எந்த வீட்டில் வசித்து வருகிறேன் என்றால் சம்பவம் நடந்த ஒத்தி வீட்டில் தான் இருந்து வருகிறேன். முத்துப்பாண்டி எப்படி எனக்கு பழக்கம் என்றால் பழக்க வழக்கத்தில் தெரியும். மாவீரன் எனது தங்கை மகன் என்றால் சரிதான். சம்பவம் நடைபெறுவதற்கு முன்னர் ரூ.50,000/– கேட்டார் என்றும், பின்னர் ரூ.10,000/– கேட்டார் என்பது தொடர்பாக புகார் கொடுத்தோமா என்றால் இல்லை.

5. சம்பவ தேதியில் ரூ.10,000/– கேட்டாரா அல்லது அதற்கு முன்பு கேட்டாரா என்றால் சம்பவ தேதியில் கேட்டார். வீட்டில் மொத்தம் எத்தனை அறைகள் உள்ளன என்றால் நான்கு அறைகள் உள்ளன. சம்பவத்திற்கு முன்னர் எனது மகன் பணம் கேட்கவில்லை என்றால் சரிதான். சம்பவத்தின்போது யார் இருந்தார்கள் என்றால் குத்திய பின்பு மனைவி, மாவீரன், முத்துப்பாண்டி ஆகியோர் வந்தார்கள். நானும், எதிரியின் மகனான எனது பேரன் காமேஷ் என்பவரும் இருந்த போது தான் சம்பவம் நடைபெற்றது. நான் சொல்வதுபோல் எதிரி சம்பவத்தில் ஈடுபடவில்லை என்றாலும், அவர் குடியிருக்கும் சொந்த வீட்டில் நான் குடிபெயர்ந்து செல்வதற்காக பொய்யான புகார் கொடுக்கப்பட்டு, வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

6. எனக்கு ஏற்பட்ட காயம் எதிரி தாக்கியதால் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. நானாகவே காயத்தை ஏற்படுத்திக்கொண்டு எதிரி மீது புகார்

கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் தற்போது சொந்த வீட்டில் குடியிருந்து வருகிறேன் என்றாலும், ஒத்தி வீட்டில் குடியிருக்கவில்லை என்றால் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிக்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. சம்பவத்தின்போது நான் என்ன சட்டை அணிந்திருந்தேன் என்றால் வெள்ளை சட்டை. எதிரியும் வெள்ளை சட்டை அணிந்திருந்தார் என்றால் சரிதான்.

<u>மறு விசாரணை</u> :– இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 06.08.2026 அன்று வியாழக்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI

Digitally signed by G SREE DEVI
Date: 2026.08.06 18:34:56 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
06.08.2026